செய்தி வெளியீடு எண் 14 நாள்.05.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் வர்தா புயலால் வீடுகள்,விவசாயப் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மதுரவாயல் வட்டத்தில் 1137 நபர்களுக்கு ரூபாய். 56 லட்ச்சத்து 72 ஆயிரத்து 505 கான நிவாரண தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் வர்தா புயலால் வீடுகள்,விவசாயப் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மதுரவாயல் வட்டத்தில் 1137 நபர்களுக்கு ரூபாய். 56 லட்ச்சத்து 72 ஆயிரத்து 505 கான நிவாரண தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.01.2017) நடைபெற்றது.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகினங்க வர்தா புயல் பாதிப்புப் ஏற்பட்ட உடன் போர்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் முடிக்கப்பட்டது பணிகளை துரிதப்படுத்த மாண்புமிகு பெருமக்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் மேற்பார்வையில் பாதிப்புகள் சரி செய்யப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினர். மீனவர்கள்மற்றும் விவசாய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க மீட்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது.

புயலால் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு நிவாரணத் தொகையாக இன்று 1137 நபர்களுக்கு ரூபாய். 56 லட்ச்சத்து 72 ஆயிரத்து 505 கான ஆணைகள் வழங்கப்படுகிறது. உயிரிழந்த 2 நபர்களின் குடும்பங்களுக்கு தலா 4 இலட்சம் வீதம் 8 இலட்சத்திற்கான நிவாரணத் தொகைக்கான ஆணைகள் மற்றும் விவசாய பயிர் சேத்ததிற்கு 9 விவசாயிகளுக்கு ரூபாய். 1 லட்சத்து 92ஆயிரத்து 105 கான ஆணைகள் வழங்கப்படுகிறது. பொங்கல் திருவிழாவை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசு வழங்கும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கபபடும். 85103 நபர்களுக்கு விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்கப்படவுள்ளது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற திரு.கே.என்.இராமசந்திரன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர், அம்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.வீ.வீரப்பன், மதுரவாயல் வட்டாட்சியர் திரு.மூ,குமார், துணை வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~